<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (20.6.2013) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் விருத்தாச்சலத்தில் ரயில்வே கடவு எண்.170–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தின் சார்பில் வாங்கப்பட்ட எம்.எல். விவேகானந்தா என்ற புதிய படகினை பயணிகளின் பயன்பாட்டிற்காகத் துவக்கி வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி மிக முக்கியப் பங்கினை வகிக்கிறது. தொழில், போக்குவரத்து, சுற்றுலா போன்ற முக்கியத் துறைகளின் வேகமான வளர்ச்சிக்கு சாலை கட்டமைப்பு வசதி இன்றியமையாததாகும். மாநிலத்தின் தற்போதைய சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக புதிய பாலங்களைக் கட்டுவதிலும், சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரிப்பதிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் ரயில்வே கடவு எண்.170–க்கு மாற்றாக 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 773.89 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இந்தப் புதிய மேம்பாலம் திறக்கப்படுவதால் கடலூர், சிதம்பரம், மற்றும் விருத்தாச்சலம் பகுதிகளிலிருந்து ஆத்தூர், சேலம் பகுதிகளுக்கு செல்லும் பல்லாயிரக்கணக்கான பயணிகள் பெரிதும் பயனடைவார்கள்.

மேலும், கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான சுமார் 36 ஆண்டுகளைக் கடந்த எம்.எல்.பகீரதி என்ற படகிற்குப் மாற்றாக சுமார் 150 பயணிகள் பயணம் செய்யத்தக்க

வகையில் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட எம்.எல். விவேகானந்தா என்ற புதிய படகினை இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பயணிகளின் பயன்பாட்டிற்காகத் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தலைவர் (பொறுப்பு), தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்: 20.6.2013